# ஆஸ்திரேலியாவில் வேலை பார்த்தல்



## உங்கள் பணத்தை நிர்வகித்தல் மெய்த்தகவல் தாள்

நீங்கள் ஆஸ்திரேலியாவில் வேலை செய்கையில் பணியமர்த்தப்பட்டால், உங்களுக்கு ஊதியம் வழங்கப்படும், அத்துடன் நீங்கள் சம்பாதிக்கும் பணத்துக்குக் கட்டாயம் வரி செலுத்த வேண்டும்.

## வேலைக்குச் சம்பளம் பெறுதல்

நீங்கள் சம்பளம் பெறும்போது சம்பளச் சீட்டு பெறுவீர்கள். உங்கள் சம்பளச் சீட்டில் நீங்கள் எவ்வளவு சம்பளம் பெற்றீர்கள், எவ்வளவு வரி செலுத்தினீர்கள் மற்றும் எவ்வளவு பணி ஓய்வுத் தொகை உங்கள் பணி ஓய்வு நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது போன்றவை காண்பிக்கப்பட்டிருக்கும்.

## வரி

நீங்கள் ஆஸ்திரேலியாவில் வேலை பார்க்கும்போது நீங்கள் ஆஸ்திரேலிய அரசுக்கு வரி செலுத்துகிறீர்கள். அதனால் மருத்துவமனைகள், பள்ளிகள், சாலைகள் மற்றும் பொதுப் போக்குவரத்து (பேருந்துகள் மற்றும் இரயில் வண்டிகள்) போன்ற சமூகத் தேவைகளுக்கான சேவைகளை வழங்க அரசுக்கு நிதி கிடைக்கிறது.

## வரி கோப்பு எண்

ஆஸ்திரேலியாவில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் சொந்தமாக வரி கோப்பு எண் உள்ளது. ஆஸ்திரேலியாவில் வேலை செய்ய உங்களுக்கு வரி கோப்பு எண் தேவைப்படுகிறது. நீங்கள் ஒரு வேலையில் சேர்ந்தால், உங்கள் வரி கோப்பு எண்ணை உங்களுக்கு வேலை தருவோரிடம் வழங்க வேண்டும்.

## பணி ஓய்வுத் தொகை

இந்தப் பணமானது நீங்கள் வயதான பின் இனியும் வேலை பார்க்க முடியாத சமயத்துக்காகச் சேமித்து வைக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. அது பணி ஓய்வு நிதியில் உங்களுக்கு வேலை தருவோரால் சேர்க்கப்படுகிறது.

## நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

- நீங்கள் ஆஸ்திரேலியாவில் வேலை செய்கையில் பணியமர்த்தப்பட்டால், உங்களுக்கு ஊதியம் வழங்கப்படும்.
- நீங்கள் ஆஸ்திரேலியாவில் வேலை செய்தால் நீங்கள் ஆஸ்திரேலிய அரசுக்கு வரி (பணம்) செலுத்துகிறீர்கள்
- பணி ஓய்வுத் தொகை என்பது நீங்கள் வயதான பின் இனியும் வேலை பார்க்க முடியாத சமயத்துக்காகச் சேமித்து வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பணமாகும்.
- உங்களுக்கு வேலை தருவோர் பொதுவாக நீங்கள் சம்பாதிக்கும் பணத்தில் 9 சதவீதம் கூடுதலாக உங்களுக்காகப் பணி ஓய்வு நிதியில் சேர்க்க வேண்டும். இந்தப் பணம் உங்கள் சம்பளத்துக்கு மேல் கூடுதலாகக் கொடுக்கப்படுகிறது.

## எங்கே உதவி மற்றும் மேலதிகத் தகவல்களைப் பெறுவது

பணி ஓய்வுத் தொகையைப் பற்றிய மேலதிக விவரங்களுக்கு, MoneySmart இணையதளமான **www.moneysmart.gov.au** என்ற முகவரிக்குச் செல்லுங்கள் அல்லது 1300 300 630 என்ற எண்ணுக்கு அழையுங்கள்.

உங்களுக்கு வேலை தருவோரிடம் உங்களுக்கு பிரச்சினைகள் இருந்தாலோ, அல்லது ஒரு தொழிலாளர் என்ற வகையில் உங்கள் உரிமைகளைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள விரும்பினாலோ ஆஸ்திரேலிய நியாய வேலையின் இணையதளமான **www.fwa.gov.au** என்ற முகவரிக்குச் செல்லுங்கள் அல்லது 1300 799 675 என்ற எண்ணுக்கு அழையுங்கள்.

MONEYSMART

## மைக்கேல் தன்னுடைய புதிய வேலையைத் தொடங்குகிறார்

மைக்கேல் கடந்த 3 மாதங்களாக வேலையில்லாமல் இருந்து, தனக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு உதவும் வகையில் சென்டர்லிங்க் உதவித்தொகையைப் பெற்று வந்தார்

உள்ளூர்த் துணிக்கடை ஒன்றில் விற்பனையாளர் வேலைக்காக விளம்பரம் ஒன்றை அவர் பார்த்தார். அதற்கு விண்ணப்பித்து, நேர்காணலுக்குச் சென்று, வேலையைப் பெற்றுவிட்டார்.

பின்னர் மைக்கேல் தன் புதிய வேலை பற்றிய விவரங்களடங்கிய கடிதம் ஒன்றை புதிய வேலை தருவோரிடமிருந்து பெற்றார்.

மைக்கேல் அக்கடிதத்தைப் படித்தார். அதில் வேலை தருவோரின் பெயர் ஜாக் ஸ்மித் என்றும், நிறுவனத்தின் பெயர் 'கிளாத்ஸ் ஃபார் அஸ்' என்றும் எழுதியிருந்தது. வேலையின் பெயர் 'துணி விற்பனையாளர்' என்றும், மைக்கேலுக்கு மணிக்கு 16 டாலர்கள் தரப்படும் என்றும் அத்துடன் வாரத்துக்கு 25 மணி நேரம் வீதம் பகுதி நேர வேலை செய்ய வேண்டும் என்றும் எழுதியிருந்தது.

2 வாரங்கள் வேலை செய்தபின், மைக்கேல் தனது முதல் சம்பளத்தைப் பெற்றார். அவருக்கு சம்பளச் சீட்டும் கொடுக்கப்பட்டது. அதில் அவருக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கப்பட்டது, எவ்வளவு வரி அவர் செலுத்தினார் மற்றும் மைக்கேலின் பணி ஓய்வு நிதியில் அவருக்கு வேலை தருவோர் எவ்வளவு பணி ஓய்வுத் தொகை செலுத்தியிருந்தார் போன்றவைகளை அவர் காண முடிந்தது.

2 வாரங்கள் வேலை பார்த்ததற்காக 800 டாலர்கள் சம்பாதித்ததையும், வரிக்காக 85 டாலர்கள் செலுத்தியிருந்ததையும் மைக்கேல் தன்னுடைய சம்பளச் சீட்டில் பார்த்தார். அத்துடன் அவருடைய பணி ஓய்வு நிதிக்காக அவருக்கு வேலை தருவோர் 72 டாலர்களை ஒரு சிறப்பு நிதியில் செலுத்தியிருந்ததையும் பார்த்தார்.

மறுவாரம் மைக்கேல் சென்டர்லிங்கிடமிருந்து அவருடைய உதவித்தொகையைப் பெற்றார்.

சென்டர்லிங்கிடம் தனது புதிய வேலையைப் பற்றிச் சொல்வது அவசியம் என்பது மைக்கேலுக்குத் தெரியும். அப்போதுதான் அவர்கள் அவருக்குச் செலுத்த வேண்டிய தொகையை மாற்ற முடியும். சென்டர்லிங்குக்குச் சொல்லாவிட்டால் மைக்கேலுக்கு அதிகப் பணம் சென்டர்லிங்கினால் செலுத்தப்பட்டு விடும். அதனால் கடன் பாக்கி வந்து விடும். அதை அவர் செலுத்த வேண்டியதிருக்கும் அல்லது அவர் பிரச்சினைக்கு உள்ளாவார்.

மைக்கேல் சென்டர்லிங்கிடம் தனது புதிய வேலையைப் பற்றிச் சொல்வதற்கு அவர்களைத் தொலைபேசியில் அழைத்தார். அத்துடன் தனக்கு வேலை தருவோரிடமிருந்து பெற்று கடிதத்தின் நகலை அவர்களுக்கு அனுப்பினார்.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

This page has been intentionally left blank.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை